பக்கம்.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண். 76/2022**

**வா.சா. 1– பழனிச்சாமி**

**நாள். 24.09.2025.**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு தற்போது 75 வயது ஆகிறது. நான் காதிகிராப்டில் மேலாளராக வேலை பார்த்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். வாதி, பிரதிவாதிகளின் குடும்ப விவகாரங்கள் எனக்கு நன்றாக தெரியும். தாவா வழக்கிற்கான தேவையான விவரங்களை என் மனைவி சார்பாக நான்தான் வழக்கறிஞரிடம் சொன்னேன். வாதியும், 2,3 பிரதிவாதிகளும் 1ம் பிரதிவாதியின் மக்கள் என்றால் சரிதான். 1ம்பிரதிவாதியின் தகப்பனார் நாச்சியப்ப கவுண்டர் ஆகும். நாச்சியப்ப கவுண்டருடன் பிறந்தவர்கள் 4 பேர்கள் என்றும் அவர்கள் பெயர் கருப்பணகவுண்டர், நல்லியப்ப கவுண்டர், குப்பணகவுண்டர், பழனியப்ப கவுண்டர் ஆகியோர்கள் வெள்ளையகவுண்டரின் மக்கள் ஆவார்கள் என்றால் சரிதான்.

1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்களை என் மனைவி தரப்பில் மறுத்து எந்தவிதமான மறுப்புரை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.438ல் 4 ஏக்கர் 87 செண்ட், சர்வே எண். 439 ல் 7 செண்ட், சர்வே எண். 472ல் 1 ஏக்கர் , சர்வே எண். 473ல் 28 மற்றும் ஒரு 10 செண்ட், சர்வே எண். 474ல் 2 ஏக்கர் 34 செண்ட், சர்வே எண். 471ல் 1 ஏக்கர் 60 செண்ட், சர்வே எண். 475ல் 7 ஏக்கர் 34 செண்ட், சர்வே எண். 468ல் 2 ஏக்கர், சர்வே எண். 473ல் 1 ஏக்கர் 14 செண்ட்ல் பொதுவில் 3ல் ஒரு பாகம், சர்வே எண். 433ல் 20 செண்ட்ல் 3 ல் ஒரு பாகம், சர்வே எண். 473ல் 8 செண்ட்ல் உள்ள வடக்கு பார்த்த வீடுகள் இரண்டும் கிழக்கு பார்த்த கூரை நடை, ஊர்க்கட்டில் உள்ள சீமை வீடு, ஆகிய சொத்துக்கள் வெள்ளையப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான்.

வெள்ளையப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் வெள்ளையப்ப கவுண்டரின் மகனான நாச்சியப்ப கவுண்டருக்கு பொதுவில்

ஐந்தில் ஒரு பாகம் என்றால் சரிதான். மேற்படி நாச்சியப்ப கவுண்டருக்கு கடன்கள் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படுகின்ற ஆவணத்தின் மூலம் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் நாச்சியப்ப கவுண்டர் அப்போதை மைனர்களாக இருந்த 1ம் பிரதிவாதிக்காகவும், 1ம் பிரதிவாதியின் சகோதரர் ராசப்பனுக்காகவும் கார்டியனாக இருந்து கருப்பணகவுண்டருக்கு கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.1.ஆகும்.( சான்றிட்ட நகல்)** மேற்படி ஆவணத்தின் மூலம் ஐந்தில் ஒரு பாகத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

மேற்படி நாச்சியப்பன் பெற்ற கடனுக்காக அவருக்கு பாத்தியமுள்ள ஐந்தில் ஒரு பாகத்தை பொறுத்து கருப்பணகவுண்டருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நாச்சியப்பகவுண்டர் எப்போது இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி சொத்துக்களை வெள்ளையப்ப கவுண்டர் கிரையம் செய்து கொடுத்து விட்டு தனது மனைவி மக்களை அழைத்துக் கொண்டு திண்டுக்கல் தாலுகா சிலுவத்தூர் கிராமத்திற்கு பிழைப்பு தேடி சென்று விட்டார்கள் என்றால் சரிதான். அங்கு அவர்கள் நிலங்களை குத்தகைக்கு பிடித்து விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். ராசப்பன் மட்டும் தாவா கிராமத்திலேயே இருந்தார். ராசப்பன் மைனராக இருந்ததால் தாவா கிராமத்தில் இருக்க முடியாது என்றும் ராசப்பனின் தகப்பனார் ராசப்பனை தன்னோடு அழைத்து சென்று விட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ஆடு, மாடுகளை வைத்தும், பால் கறந்து விற்றும், வண்டி மாடு ஓட்டியும், பிழைப்பு நடத்தினார் என்றால் சரிதான். ஆனால் ராசப்பன் அந்த வேலைகளை செய்யவில்லை. அதில் வரும் வருமானங்களை கொண்டு 05.06.1963 அன்று 1ம் பிரதிவாதியும் 1ம் பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதரர் ராசப்பனும் சேர்ந்து தாவா சொத்துக்களில் ஒரு பகுதியை கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி கிரையம் ஆவணம் என்றால் சரிதான். **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.2.ஆகும்.( சான்றிட்ட நகல்)**

அதன் பின்னிட்டு தாவா சொத்துக்களில் ஒரு பகுதியும், வேறு சில சொத்துக்களில் ஒரு பகுதியும், 1ம் பிரதிவாதியும் , 1ம் பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதரர் ராசப்பனும் சேர்ந்து 02.03.1974 ல் ஆரப்ப கவுண்டரிடம் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி கிரையம் ஆவணம் என்றால் சரிதான். **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.3.ஆகும்.( சான்றிட்ட நகல்)**

23.05.2984 அன்று பழனிச்சாமி கவுண்டரும் அவரது சகோதரர் ராசப்பனும் கருப்புச்சாமி வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி கிரையம் ஆவணம் என்றால் சரிதான். **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.4.ஆகும்.( சான்றிட்ட நகல்)**

19.06.1984 அன்று குப்புச்சாமி கவுண்டர் வகையறாவிடம் 1ம் பிரதிவாதியும் அவரது அவரது சகோதரர் ராசப்பனும் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி கிரையம் ஆவணம் என்றால் சரிதான். **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.5.ஆகும்.( சான்றிட்ட நகல்)**

03.03.1993 அன்று கருப்பாயம்மாளிடமிருந்து 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரர் ராசப்பனும் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி கிரையம் ஆவணம் என்றால் சரிதான். **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.6.ஆகும்.( சான்றிட்ட நகல்)**

பி.வா.சா.ஆ1 முதல் பி.வா.சா.ஆ.6. வரையான சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதியும் அவரது மகனான 2ம் பிரதிவாதியும், 1ம் பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதரரான ராசப்பனும் அவரது மகன் முத்துச்சாமியும் சேர்ந்து 04.10.1995 அன்று என்னிடம் காட்டப்படுகின்ற ஆவணம் மூலம் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். **அந்த பாகப்பிரிவினை பத்திரம் பி.வா.சா.ஆ.7. ஆகும். ( சான்றிட்ட நகல்)**

பி.வா.சா.ஆ.7 ஆவணத்தின் மூலம் 1ம் பிரதிவாதிக்கு பாகத்தில் கிடைத்த சொத்துக்களை 2ம் பிரதிவாதிக்கு 11.03.2009ம் படி கிரைய ஆவணத்தின் படி கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். **அந்த கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.8.ஆகும். ( சான்றிட்ட நகல்)** . (அதன் நகல் வாதி தரப்பில் வா.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.)

பி.வா.சா.ஆ.8. ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்ட தேதியில் மேற்படி கிரையத்தை பற்றி எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விவரம் எனக்கு நன்றாகவே தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக நான்தான் நகல் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2.ஆவணத்தில் பூர்வீக சொத்துக்களில் கிடைத்த வருமானத்தை கொண்டு சொத்துக்கள் வாங்கப்பட்டதாக ஆவண வாசகம் இருப்பதால்தான் நீங்கள் பாகம் கேட்கிறீர்களா என்றால் சரிதான். வா.சா.ஆ.2.ஆவணத்தை தவிர பூர்வீக சொத்து என்பதை காட்டுவதற்கு வேறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் என் வக்கீலிடம் கொடுத்திருக்கிறேன். எனது வக்கீலிடம் என்ன ஆவணம் கொடுத்துள்ளேன் என்றால் SLR, UDR வாங்கி கொடுத்திருக்கிறேன். வா.சா.ஆ.1. ஆவணத்தில் 3ம் பிரதிவாதியை கொடிவழி ஜாபிதாவில் காட்டவில்லை என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி யார் என்றே எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி யார் என்று தெரியாத நிலையில் அவரை இவ்வழக்கில் ஏன் தரப்பினராக சேர்த்தீர்கள் என்றால் எனக்கு தெரிந்ததை மட்டுந்தான் சொல்கிறேன்.சாமியாத்தாளை பற்றி தெரியாது. 3ம் பிரதிவாதியை காட்டாமல் தாக்கல் செய்துள்ளள வா.,சாஆ.1. சட்டப்படி ஏற்கத்தக்தல்ல என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள ஆவணமான வா.சா.ஆ.4. ல் 2வது பிரதிவாதி பெயர் இருக்கிறது என்றால் சரிதான். அதன் பட்டா எண். 4125 என்றால்சரிதான். மேற்படி பட்டாவை ஆட்சேபணை செய்து வருவாய் துறையில் நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். வக்கீலிடம் சொல்லியிருக்கிறேன். பொதுவில் உள்ள வாய்க்கால், கிணறு, வீட்டடிகளை நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ல் முத்துச்சாமி பெயர் இருக்கிறது என்றால் சரிதான். சர்வே எண். 473/ 3 ல் 3 ஏர்ஸ் 1ம் பிரதிவாதி பெயரிலும் முத்துச்சாமி பெயரிலும் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 471/ 5 ல் 5 1/2 ஏர்ஸ் சங்காயம்மாள், 1ம் பிரதிவாதி பழனியப்பன், ராமாயி, நல்லுச்சாமி, முத்துச்சாமி ஆகியோர்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் மேற்படி 4 பட்டாக்களையும் ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் நில வரி இரசீதுகள் 3 எண்ணம் பட்டா 4125 , 987, ஆகிய பட்டாக்களுக்கு 2ம் பிரதிவாதியால் செலுத்தப்பட்ட நில வரி செலுத்துப்பட்டுள்ளது என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.9. ஆகும்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.24 08:20:41 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.